# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 2000 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீடு (திருத்தச்) சட்டம்

---

*(2000 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*2000, யூலை மாதம் 14 ஆந் திகதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு 01, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

**விலை : ரூபா 11.50** **தபாற் செலவு : ரூபா 5.25**

# 2000 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீடு (திருத்தச்) சட்டம்

[2000 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ.— ஓ 21/2000

## 1991 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 2000 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீட்டு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப்பெயர்.*

2. 1998 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1991 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :— *1991 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில், "தொலைத் தொடர்புச் சேவைகளை வழங்குகின்ற தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தொலைத்தொடர்புச் சேவைகளை வழங்குகின்ற தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற ; அல்லது" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் முடிவில் பின்வரும் பந்தியை சேர்த்துக்கொள்வதன் மூலமும் :—

"(உ) பந்தி (இ) அல்லது (ஈ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள சேவை தவிர்ந்த வேறு எவ்விவரணத்தையும் சேர்ந்த சேவை ஒன்றை வழங்குகின்ற தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற.".

2 — H 006529 — 825 (00/04)

முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவானது, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் ஓராம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(1) இச்சட்டத்தின் அடுத்துறும் ஏற்பாடுகளுக்கமைய,

(அ) இரண்டாம் பிரிவின் ஓராம் உட்பிரிவின் (அ), (ஆ) அல்லது (இ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவராக இருக்கின்றவரும் இச்சட்டம் ஏற்புடைத்தாகவிருக்கின்றவருமான ஒவ்வோர் ஆளிடமிருந்தும், 1992 ஆம் ஆண்டின் சனவரி 1 ஆந் தேதியன்று, 1993 சனவரி 1 ஆம் தேதியன்று, 1994 சனவரி 1 ஆந் தேதியன்று, 1995 சனவரி 1 ஆந் தேதியன்று, 1996 சனவரி 1 ஆந் தேதியன்று அத்துடன் 1997 சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆரம்பிக்கின்ற ஒவ்வோராண்டினதும் ஒவ்வொரு காலாண்டிற்கும் அல்லது அதன் பாகத்திற்கும் ;

(ஆ) இரண்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள ஆளொருவராக இருக்கின்றவரும் இச்சட்டம் ஏற்புடைத்தாகவிருக்கின்றவருமான ஒவ்வோராளிடமிருந்தும் 1998 ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆரம்பிக்கின்ற ஒவ்வோராண்டினதும் ஒவ்வொரு காலாண்டிற்கும் அல்லது அதன் பாகத்திற்கும் ;

(இ) இரண்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள ஆளொருவராக இருக்கின்றவரும், இச்சட்டம் ஏற்புடைத்தாகவிருக்கின்றவருமான ஒவ்வோராளிடமிருந்தும் —

(i) இரண்டாயிரமாம் ஆண்டு பெப்புருவரி 15 ஆந் தேதியில் ஆரம்பித்து 2000 ஆண்டு மார்ச் 31 ஆந் தேதியன்று முடிவுறுகின்ற காலப் பகுதிக்கு, அக்காலப்பகுதிக்கான அவ்வாளின் மொத்த விற்பனை வரவு ஐம்பதினாயிரம் ரூபாவாகவிருந்தால் அல்லது அதற்கு மேற்பட்டதாக இருந்தால் ;

(ii) இரண்டாயிரமாம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் ஆரம்பிக்கின்ற ஒவ்வோராண்டினதும் ஒவ்வொரு காலாண்டிற்கும் அல்லது அதன் பாகத்திற்கும் (இச்சட்டத்தில் இதனகத்துப்பின்னர் "இயைபான காலாண்டு" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அக்காலாண்டிற்கு அவ்வாளின் விற்பனை மொத்த வரவு ஓர் இலட்சமாக அல்லது அதற்கு மேற்பட்டதாக இருந்தால்,

அக்காலாண்டிற்கான அல்லது அதன் பாகத்துக்கான அவ்வாளின் மொத்த விற்பனை வரவு மீது, அல்லது அதன் பாகத்தின்மீது இச்சட்டத்திற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள தோதான வீதங்களில் கணிப்பீடு செய்யப்பட்ட (இதனகத்துப் பின்னர் "அறவீடு" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) தேசிய பாதுகாப்பு அறவீடொன்று விதிக்கப்படுதல் வேண்டும்.".

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் —

(அ) அவ்வுட்பிரிவின் (ஏ) என்னும் பந்தியில் "அத்தகைய உதிரிப்பாகத்தின் பெறுமதி ; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய உதிரிப் பாகத்தின் பெறுமதி ; என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;";

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஐ) என்னும் பந்தியில், "அல்லது பெறப்படற்பாலதான ஏதேனும் பணத்தொகை". என்னும் சொற்களுக்குப் பதிலாக "அல்லது பெறப்படற்பாலதான ஏதேனும் பணத்தொகை ;". என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(இ) அவ்வுட்பிரிவின் இறுதியில் பின்வரும் பந்திகளைச் சேர்த்துக்கொள்வதன் மூலமும் :—

"(ஒ) (அ) பின்வரும் சேவைகளில் ஏதேனும் ஒன்றை அல்லது அதற்கு மேற்பட்ட சேவைகளை வழங்குவதன்மூலம் அவ்வாளினால் பெறப்பட்ட அல்லது பெறப்படற்பாலதான ஏதேனும் பணத்தொகை :—

(i) மின்சாரம் வழங்குதல் ;

(ii) மருத்துவ சேவைகள் ;

(iii) நீர் வழங்கல் ;

(iv) பொருட்களை அல்லது பயணிகளைக் கொண்டுசெல்லல் ;

(v) அசைவுள்ள ஆதனத்தைக் குத்தகைக்கு விடுதல் ;

(vi) 1996 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க பண்டங்கள், சேவைகள் மீதான வரிச் சட்டத்தின்கீழ் அவ்வாள் பதிவுசெய்யப்பட்டிருந்தால் எவ்விவரணத்தினதுமான பழுதுபார்த்தல் சேவைகள் ;

(vii) கல்வி நிறுவனமொன்றில் கல்விச் சேவைகள் ;

(viii) அத்தகைய சேவைகள், ஏதேனும் கட்டிடம், வீதி, பாலம், நீர்வழங்கல், வடிகால் அல்லது கழிவு நீரகற்றல், வடிகால் முறைமை, துறைமுகம், விமான நிலையம் அல்லது தொலைத் தொடர்பில் அல்லது மின்சாரத்தில் ஏதேனும் உள்ளகக் கட்டமைப்பு கருத்திட்டம் சம்பந்தமான அத்தகைய சேவைகளாக இருக்கின்றவை, கீழ் ஒப்பந்தக் காரர் ஒருவரல்லாதவரான நிர்மாண ஒப்பந்தக்காரர் ஒருவரின் சேவைகள்". ;

(ix) அத்தகைய பொருளின் தரத்தையும் தன்மையையும் நேரடியாக முன்னேற்றுவது தொடர்பிலான சேவைகளாக இருக்கின்ற ஏதேனும் பொருளை ஏற்றுமதி செய்யும்வருக்கும் வழங்கப்படும் சேவைகள் ;

(x) தைக்கப்பட்ட ஆடைகளின் ஏற்றுமதியாளர் எவருக்கும் வழங்கப்படும் ஆடைகள் தைக்கும் சேவைகள் ;"

(xi) அத்தகைய சேவைகள் இலங்கையிலிருந்து ஏதேனும் பொருள் ஏற்றுமதி செய்யப்படுவது தொடர்பிலானதாக இருக்கும்வரை அத்தகைய கப்பல் சரக்கை அனுப்புபவர் ஒருவரின், 1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கப்பல் முகவர்களுக்கு உரிமமளித்தல் சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்ட கப்பற்றொழில் முகவரொருவரின் அல்லது எடுத்துச்செல்பவர் ஒருவரின் சேவைகள் ;

(xii) பகிரங்கக் கூட்டுத்தாபனம் ஒன்றினால் வழங்கப்படும் சேவைகள், அத்தகைய சேவைகள் இலங்கையிலிருந்து ஏதேனும் பொருள் ஏற்றுமதி செய்யப்படுவது தொடர்பிலானதாக இருக்குமவரை ;

(xiii) ஹோட்டல், விருந்தினர் விடுதி, உண்டிச்சாலை அல்லது அது போன்ற வேறு தொழில் ஒன்றைக் கொண்டுநடாத்துதல், ஆயின் அத்தகைய ஹோட்டல், விருந்தினர் விடுதி, உண்டிச்சாலை அல்லது அதேபோன்ற வேறு தொழில் என்பன 1996 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க பண்டங்கள், சேவைகள் மீதான வரிச்சட்டத்தின்கீழ்ப் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும் ;

(xiv) ஏதேனும் உள்ளூர் உற்பத்திப் பொருளின் ஏல விற்பனைக்காரர் ஒருவராக, தரகராக, காப்புறுதி முகவர் அல்லது தரகு முகவராக வழங்கப்படும் சேவைகள் ;

(xv) அத்தகைய ஆள் இலங்கை உல்லாசப் பிரயாணச்சபையில் பதிவுசெய்யப்பட்டிருந்தால் உள்நாட்டுச் சுற்றுலாக்கள் தொடர்பில் பிரயாண முகவர் ஒருவரினால் வழங்கப்படும் சேவைகள் ;

(ஆ) சினிமாக் கொட்டகைகளில் முக்கியமாகக் காண்பிக்கப்படுவதற்காக எவையேனும் சினிமாத் திரைப்படச் சுருள்களை விநியோகித்தல் அல்லது உற்பத்தி செய்தலும், வழங்குதலும் ;

(இ) சினிமாக் கொட்டகையொன்றில் திரைப்படங்களைக் காண்பித்தல் ; அத்துடன்

(ஓ) 1996 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நாடுகாக்கும் உதவுதொகைச் சட்டத்தின் நோக்கங்களுக்கு அத்தகைய ஆளின், அல்லது அத்தகைய ஆள் ஒரு பங்காண்மையாக இருக்குமிடத்து அத்தகைய பங்காண்மையின் எவரேனும் பங்காளரின் வேதனங்கள் எந்தத் தொகையின்மீது கணிக்கப்படுகின்றனவோ அந்தத் தொகை எதுவும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (ஐ) என்னும் பந்தியில் "1999 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஒவ்வொரு காலாண்டிற்கும்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1999 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப்பின்னர் ஆனால், 2000 ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வொரு காலாண்டிற்கும் என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) பந்தி (ஐ) என்பதனை உடனடுத்துப் பின்வரும் பந்திகளைச் சேர்ப்பதன்மூலமும் :—

"(ஒ) 2000 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று தொடங்கும் ஒவ்வொரு காலாண்டிற்கும் —

(i) (அ) அவ்வாளின், இவ்வுட்பந்தியின் இனம் (ஆ) என்பதில் குறிப்பீடுசெய்யப்பட்ட மொத்த விற்பனை வரவு அல்லாத மொத்த விற்பனை வரவின் ஐந்தரைச் சதவீதத்திற்கும் ; அத்துடன்

(ஆ) (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட ஏதேனும் மோட்டார் கார், மோட்டார் கோச்சு அல்லது லொறி அல்லாத ஏதேனும் பொறியின்,

பொறித்தொகுதியின் அல்லது உபகரணத்தின் இறக்குமதியில் அல்லது உற்பத்தியின்றெழும் அவ்வாளின் மொத்த விற்பனை வரவின் அரைச் சதவீதத்திற்கும் சமமான தொகையொன்று,

2000, ஏப்பிறல் 1 ஆம் தேதி தொடங்கி அக்காலாண்டின் 2000 மே 10 ஆம் தேதியன்று முடிவடையும் காலப்பகுதிக்கு 2000 மே பதினைந்தாம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர்,

(ii) 2000 மே 1 ஆம் தேதியன்று தொடங்கி அக்காலாண்டில் 2000 மே 31 ஆம் தேதியன்று முடிவடையும் காலப்பகுதிக்கு,

(அ) அவ்வாளின் இவ்வுட்பந்தியின் இனம் (ஆ) என்பதில் குறிப்பீடு செய்யப்படும் மொத்த விற்பனை வரவு அல்லாத மொத்த விற்பனை வரவின் ஆறரைச் சதவீதத்திற்கும் ; அத்துடன்

(ஆ) (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் கருத்தெல்லைக் குட்பட்ட ஏதேனும் மோட்டார் கார், மோட்டார் கோச்சு அல்லது லொறி அல்லாத ஏதேனும் பொறியின், பொறித்தொகுதியின் அல்லது உபகரணத்தின் இறக்குமதியிலிருந்து அல்லது உற்பத்தியினின்றெழும் அவ்வாளின் மொத்த விற்பனை வரவின் அரைச் சதவீதத்திற்கும், சமமான தொகையொன்று.

2000 யூன் பதினைந்தாம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் ;

(iii) அத்தகைய ஆளினால், இப்பந்தியின் (i) ஆம் உட்பந்தியினதும் (ii) ஆம் உட்பந்தியினதும் ஏற்பாடுகளுக்கிணங்கச் செலுத்தப்பட்ட தொகைகளின் கூட்டுமொத்தத்தால் குறைக்கப்பட்டதான அக்காலாண்டிற்கென அக்காலாண்டின் இறுதியை உடனடுத்துவரும் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் அவரால் செலுத்தப்படற்பாலதான விதிப்பனவின் தொகை ; அத்துடன்

(ஓ) 2000, யூலை 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வொரு காலாண்டிற்கும் அக்காலாண்டின் முதலாம் மாதத்திற்கென,

(i) (அ) அவ்வாளின், இந்த உட்பந்தியின் இனம் (ஆ) என்பதில் குறிப்பீடுசெய்யப்பட்ட மொத்த விற்பனை வரவு அல்லாத மொத்த விற்பனை வரவின் ஆறரைச் சதவீதத்திற்கும் ; அத்துடன்

(ஆ) (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் ஏதேனும் மோட்டார் கார், மோட்டார் கோச்சு அல்லது லொறி அல்லாத ஏதேனும் பொறியின், பொறித்தொகுதியின் அல்லது உபகரணத்தின் இறக்குமதியில் அல்லது உற்பத்தியினின்றெழும் அவ்வாளின் மொத்த விற்பனை வரவின் அரைச் சதவீதத்திற்கு, சமமான தொகையொன்று,

அக்காலாண்டின் இரண்டாம் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர்,

(ii) அக்காலாண்டின் இரண்டாவது மாதத்திற்கு,

(அ) அவ்வாளின் இவ்வுட்பந்தியின் இனம் (ஆ) என்பதில் குறிப்பீடுசெய்யப்பட்ட மொத்த விற்பனை வரவு அல்லாத மொத்த விற்பனை வரவின் ஆறரைச் சதவீதத்திற்கும் ; அத்துடன்

(ஆ) (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் ஏதேனும் மோட்டார் கார், மோட்டார் கோச்சு அல்லது லொறி அல்லாத ஏதேனும் பொறியின், பொறித்தொகுதியின் அல்லது உபகரணத்தின் இறக்குமதியில் அல்லது உற்பத்தியினின்றெழும் மொத்த விற்பனை வரவின் அரைச் சதவீதத்திற்கும், சமமான தொகையொன்று,

அக்காலாண்டின் மூன்றாம் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்குமுன்னர் ; அத்துடன்

(iii) அத்தகைய ஆளினால், இப்பந்தியின் (i) ஆம் உட்பந்தியினதும் (ii) ஆம் உட்பந்தியினதும் ஏற்பாடுகளுக்கிணங்கச் செலுத்தப்பட்ட தொகைகளின் கூட்டுமொத்தத்தால் குறைக்கப்பட்டதான அக்காலாண்டிற்கென அக்காலாண்டின் இறுதியை உடனடுத்துவரும் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்குமுன்னர் அவரால் செலுத்தப்படற்பாலதான விதிப்பனவின் தொகை".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**5.** 1997 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவானது, "வங்கியாளர்" என்னும் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்னர், பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:

"எவ்விவரணத்தையும் சேர்ந்த சேவை ஒன்றை வழங்குகின்ற தொழில் என்பது கம்பெனி ஒன்றினால் வளவுகள் குத்தகைக்கு விடப்படுதலையும் உள்ளடக்கும் ;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் அட்டவணைக்கான திருத்தம்.

**6.** முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(i) அவ்வட்டவணையின் 9 ஆம் விடயத்தில், "1997 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வோர் ஆண்டினதும் ஒவ்வொரு காலாண்டிற்கும்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக,

"1997 சனவரி 1 ஆம் தேதியன்றோ அல்லது அதன் பின்னரோ ஆனால், 2000 சனவரி 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஒவ்வோராண்டினதும் ஒவ்வொரு காலாண்டிற்கும் அத்துடன் 2000 சனவரி 1 ஆம் தேதியன்று தொடங்கும் காலாண்டிற்கும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(2) அவ்வட்டவணையின் இறுதியில் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலமும் :—

"10. இரண்டாயிரம் ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று தொடங்கும் காலாண்டிற்கு —

(i) (அ) 2000, ஏப்பிறல் 1 ஆம் தேதி தொடங்கி 2000, மே 10 ஆம் தேதி முடிவடையும் காலப்பகுதிக்கு ஏற்படுவதான பந்தி (ii) இல் குறிப்பீடுசெய்யப்படும் மொத்த விற்பனை வரவு அல்லாத மொத்த விற்பனை வரவின்மீது

.....................5 1/2 சதவீதம்.

(ஆ) 2000, மே 11 ஆம் தேதி தொடங்கி 2000, யூன் 30 ஆம் தேதியன்று முடிவடையும் காலப்பகுதிக்கு ஏற்படுவதான பந்தி (ii) இல் குறிப்பீடு செய்யப்படும் அல்லாத மொத்த விற்பனை வரவின்மீது

6 1/2 சதவீதம்.

(ii) (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் ஏதேனும் மோட்டார் கார், மோட்டார் கோச்சு அல்லது லொறியாகவிராத ஏதேனும் பொறியின், பொறித்தொகுதியின் அல்லது உபகரணத்தின் இறக்குமதியிலிருந்து அல்லது உற்பத்தியினின்றும் எழுகின்றதான மொத்த விற்பனை வரவின் மீது

.................0.5 சதவீதம்

11. 2000 யூலை 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வோர் ஆண்டினதும் ஒவ்வொரு காலாண்டிற்கும் —

(i) இவ்விடயத்தின் (ii) ஆம் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட மொத்த விற்பனை வரவு அல்லாத மொத்த விற்பனை வரவின்மீது

..................6 1/ 2 சதவீதம்.

(ii) (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் ஏதேனும் மோட்டார் கார், மோட்டார் கோச்சு அல்லது லொறியாகவிராத ஏதேனும் பொறியின், பொறித்தொகுதியின் அல்லது உபகரணத்தின் இறக்குமதியிலிருந்து அல்லது உற்பத்தியினின்றும் எழுகின்றதான மொத்த விற்பனை வரவின் மீது

..................0.5 சதவீதம்.".

செல்லுபடியாக்குதல். 7. சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி, 2000, மே 11 ஆம் திகதி தொடங்கி இச்சட்டம் தொடங்கும் திகதியன்று முடிவடையும் காலப்பகுதியின்போது, பொறி, பொறித்தொகுதி அல்லது உபகரணம் ஒன்றல்லாத பொருளொன்றின் இறக்குமதியாளரிடமிருந்து அப்பொருளின் பெறுமதியின் ஐந்தரைச் சதவீதத்தை விஞ்சிய தொகையொன்றைச் சேகரிக்குமிடத்து, அத்தகைய சேகரிப்பு எல்லா நோக்கங்களுக்காகவும் செல்லுபடியான முறையில் செய்யப்பட்டுள்ளதாகவும் செய்யப்படவிருப்பதாகவும் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய சேகரிப்பு தொடர்பில் குடியியல் அல்லது குற்றவியல் நடவடிக்கைகள் எல்லாவற்றிற்கும் எதிராக அத்தகைய சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி இத்தால் நட்டோத்தரவாதமளிக்கவும்படுகின்றார்.

**8.** (1) எவ்வாள் ஒருவருக்கு இச்சட்டம் ஏற்புடைத்தாகின்றதோ, அவ்வாள் இச்சட்டம் நடைமுறைக்கு வந்துவிட்டதெனக் கருதப்படும் தேதிக்கு முன்னரான ஏதேனும் மாதம் அல்லது காலாண்டு தொடர்பில் ஆணையாளர் தலைமையதிபதிக்கு ஏதேனும் தொகையை செலுத்துமாறு இச்சட்டத்தின் 2 ஆம் 3 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவினால் தேவைப்படுத்தப்படுகின்றவிடத்து, அத்தகைய ஆள், எல்லா நோக்கங்களுக்காகவும், இச்சட்டமானது பாராளுமன்றத்தின் சட்டமொன்றாக அத்தாட்சிப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அத்தொகையை அவர் செலுத்தினால் அப்பிரிவுகளின் தேவைப்பாடுகளோடு அவர் இணங்கியொழுகிவிட்டார் எனக் கருதப்படுதல் வேண்டும். அத்தகைய தொகையானது அவ்வாறு செலுத்தப்படாவிட்டால், அத்தொகையை இச்சட்டமானது எத்தேதியிலிருந்து பாராளுமன்றத்தின் சட்டமொன்றாக அத்தாட்சிப்படுத்தப்பட்டதோ அத்தகைய தேதியிலிருந்து 30 நாட்கள் முடிவுற்ற பின்னர் செலுத்தப்படுவதில் தவணைதவறப்பட்டுள்ளதெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆள் அந்தத் தேதியிலிருந்து தவணைதவறிய ஒருவரெனக் கருதப்படுதலும் வேண்டும். நிலைபெ ஏற்பாடு.

"(2) இச்சட்டம் எந்த ஆளுக்கு ஏற்புடைத்தாகின்றதோ அந்த ஆள், 2000, மே 11 ஆம் திகதி தொடங்கி இச்சட்டம் தொடங்கும் திகதி வரையிலான காலப்பகுதி தொடர்பில், அக்காலப்பகுதிக்கு அவ்வாளின் மொத்த விற்பனை வரவின் ஐந்தரைச் சதவீத்தை விஞ்சிய தொகையொன்றினை ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்துமாறு இச்சட்டத்தின் 4 ஆம் பிரிவால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவால் தேவைப்படுத்தப்பட்டுள்ளவிடத்து, இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள், விடயத்திற்கேற்ப இச்சட்டத்தின் 4 ஆம் பிரிவால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவால் அவர் அக்காலப்பகுதிக்காகச் செலுத்தத் தேவைப்படுத்தப்பட்ட தொகைக்கும் அக்காலப்பகுதிக்கு அவரால் செலுத்தப்பட்ட தொகைக்குமிடையிலான வித்தியாசத்தை அவர் ஆணையாளர்

தலைமையதிபதிக்குச் செலுத்துவாராயின், அவர் அப்பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகியிருப்பதாக எல்லா நோக்கங்களுக்காகவும் கருதப்படுதல் வேண்டும். அத்தகைய வித்தியாசம் அவ்வாறு செலுத்தப்படாதவிடத்து, இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்து முப்பது நாட்கள் முடிவுற்றதன் பின்னர் அத்தகைய வித்தியாசம் தவணைதவறப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்திகதியிலிருந்து அத்தகைய ஆள் முதன்மைச் சட்டவாக்கத்தின் கருத்தெல்லைக் குள் தவணைதவறிய ஒருவராகக் கருதப்படுதலும் வேண்டும்.

கடந்தகாலத்தை உள்ளடக்கும் பயன்.

**9.** (1) இச்சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தமானது, எல்லா நோக்கங்களுக்காகவும் 2000 ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதெனக் கருதப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவுக்கும் அதற்கான அட்டவணைக்கும் செய்யப்பட்ட திருத்தங்களானவை எல்லா நோக்கங்களுக்காகவும் 2000, மே 10 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதெனக் கருதப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**10.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.